Judicial Form No. 53
[See Rule 42]
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
.............

நீதித்துறை நடுவர் நீதிமன்றம், அரூர்

**வழக்கு எண். CC 5/2026**

வழக்கு சாட்சி எண். PW7

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சாமிநாதன் | கிராமம் | : | குரும்பட்டி |
| தந்தை பெயர் | : | சின்னமுத்து | தாலுக்கா | : | அரூர் |
| வயது | : | 64 | மாவட்டம் | : | தருமபுரி |

(எதிரி சிறையிலிருந்து ஆஜர்படுத்தப்பட்டார். ).

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **7th** Day of **May 2026.**

**முதல் விசாரணை**

நான் தற்பொழுது குரும்பட்டியில் வசித்துக்கொண்டு விவசாயம் செய்து வருகிறேன். நான் அசா1ன் நிலத்தில் உள்ள தென்னைமரங்களை குத்தகைக்கு எடுத்துள்ளேன். அசா1ன் வீட்டில் ஒருநாள் இரவு நகையை சிலர் பறித்து சென்றுவிட்டதாக கேள்விப்பட்டேன். சம்பவத்தன்று மறுநாள் நான் தேங்காய் பறிக்க சென்றபோது கோட்டப்பட்டி காவல் நிலைய போலீசார் அந்த இடத்தில் விசாரணை செய்துகொள்டிருந்தார்கள். மேலும் சம்பவயிடத்தை பார்வையிட்டு படம் வரைந்த மகசர் தயார் செய்தார்கள். இன்று என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 2 வது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான்.

**பார்வை மகசர் ஏற்கனவே அசாஆ 2 ஆக குறியீடு செய்யப்படுள்ளது.** மேலும் போலீசார் அந்த இடத்திலேயே என்னிடம் மற்றொரு கையொப்பம் செய்யும்படி கேட்டுக்கொண்டதன் பேரில் நானும் அசா6ம் சாட்சியாக கையொப்பம் செய்தோம். அதில் என்ன எழுதியுள்ளது என்று எனக்கு தெரியாது. இன்று என்னிடம் காட்டப்படும் 28.12.2025ம் தேதி 12.30 மணியளவில் சம்பவயிடத்தில் இருந்து classic என்று பெயர் பதியப்பட்ட சாம்பல் நிற குள்ளா கைப்பற்றுதல் மகசரில் உள்ள 2வது கையொப்பம் என்னுடையதுதான். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

(எதிரி தரப்பில் இருந்து இலவச சட்ட உதவிகள் மூலம் நியமனம் செய்யப்பட்ட வழக்கறிஞர் திரு. K.குமரவேல் என்பவர் ஆஜர் ஆகாத படியாலும் நீதிமன்றத்தால் நியமனம் செய்யப்படவிருந்த Amicus curiaeயை எதிரி மறுத்துவிட்டதாலும் சாட்சியின் வயது மூப்பின் காரணமாகவும் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை தேதி ஒத்திவைக்கப்படாமல் முடித்து வைக்கப்படுகிறது.)

**மறுவிசாரணை இல்லை.**

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு படித்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு என் முன்னர் கையொப்பம் செய்தார்.**

**நீதித்துறை நடுவர் அரூர்.**